விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 ஆவணி 6 ஜுல்கஜ் 5 இதழ் 193
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22-8-1985

## வெலிக்கடை சிறையில்— உண்ணாவிரதமிருக்கும் 5 இளைஞர்கள்

### மயக்கநிலையில் மூவர்

### சிறை மருத்துவமனையில் அனுமதி

[கொழும்பு]
வெலிக்கடை சிறையில், சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்துவரும் ஐந்து தமிழ் இளைஞர்களில் மூவர், மயக்கமான நிலையில் நேற்று சிறைச்சாலை மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டனர்.

வெலிக்கடை சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களில் ஆறுபேர் கடந்த எட்டாம் திகதிமுதல் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து வருகின்றனர். இவர்களில் ஆரையம்பதியைச் சேர்ந்த தவராஜா விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியாக உண்ணாவி

(5-ம் பக்கம் பார்க்க)

★ ஈழம். தே. முன்னணி: "எமது நிபந்தனைகளை அரசு ஏற்கவேண்டும்''

★ கூட்டணி: "முன்னேற்றம் எதுவும் இல்லை''

★ ரொமேஷ்: "நல்ல சூழ்நிலை''

# திம்புபேச்சு இவ்வாரம் இல்லை!

(புதுடில்லி)
திம்பு மூன்றும் கட்டப் பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டபோதிலும், திட்டமிட்டபடி இவ்வாரம் இருதரப்பினருக்குமிடையே திம்புவில் பேச்சுக்கள் நடைபெறமாட்டாது என்று நேற்றிரவு கிடைக்கப்பெற்ற தகவல்கள் ஊர்ஜிதப்படுத்தின.

''நாங்கள்விதித்துள்ள நிபந்தனைகளை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளும்வரை திம்புப் பேச்சுக்களில் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை''என ஈழம் தேசிய விடுதலை முன்னணி சென்னையில் நேற்று அறிவித்திருக்கும் அதேநேரத்தில்; புதுடில்லிக்கு வந்திருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு அ. அமிர்தலிங்கம்,இதுவரைநடைபெற்ற பேச்சுக்களில் உருப்படியாக எதுவுமே இல்லை என்றும் காலத்தைத்தான் இலங்கை அரசு கடத்துவதாகத் தெரிகிறதென்றும் கருத்து வெளியிட்டுள்ளார்.

### நம்பிக்கை நட்சத்திரம்

இந்த நிலையில், ஒரே ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக இப்பொழுது திகழ்பவர் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரிதான்

''சூழ்நிலை நன்றாக இருக்கிறது. பிரச்னை தீரும அறிகுறிகள்காணப்படுகின்றன''என்று திரு: ரொமேஷ் பண்டாரி நேற்றுத் தெரிவித்தார்.

இதே கருத்தை இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் வலியுறுத்தி; இன்னும் சில தினங்களில் நல்ல பெறுபேறுகள் கிடைக்குமென்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

## வவனியா கிராமங்களில் 700 அகதிகள்!

[வவனியா]
வவனியாவில் உள்ள பூவரசங்குளம், பாவற்குளம், புளிதறித்தபுளியங்குளம், செட்டிப்புலவு, சாளம்பைக்குளம் ஆகிய இடங்களில் சுமார் 700பேர் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்

வவனியாவில் கடந்த 16-ம் திகதி தொடக்கம் நடைபெற்று வந்த கொலைகள் தீவைப்பு போன்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து உயிர் தப்பியவர்களே மேற்குறிப்பிட்ட இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதில் வவனியா ஆஸ்பத்திரியைச்சூழவுள்ள தமிழ்க்குடும்பங்களும அடங்குவர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வவனியா மாவட்ட, பிரஜைகள்குழு இருவாரங்களுக்கு இலவசஉணவுப்பொருட்களை வழங்கப்பட்டுவருவதாக அதன் செயலாளர் டாக்டர் எஸ். பரராச

(5 ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி: ஐவர் பலி!

[திருகோணமலை]
திருகோணமலையில் நேற்று ஏற்பட்ட வீதிக்கண்ணிவெடிச் சம்பவத்தில் ஆயுதப்படையைச் சேர்ந்த ஐவர் பலியானார்கள்!

திருகோணமலையில், தெஹிவத்தை என்னுமிடத்தில் இச் சம்பவம் நடந்தது.

## வவனியா: ராணுவ விசாரணை

(கொழும்பு)
கடந்த வாரம் வவனியாவில் நடைபெற்ற அசம்பா

(5-ம் பக்கம் பார்க்க)

## பெயர்: சோதனை; நடந்ததோ அபகரிப்பு!

[யாழ்ப்பாணம்]
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த லொறிகள், அநுராதபுரத்திற்குச் சமீபத்தில் வைத்து சோதனையிடப்பட்டன.

இச்சோதனையின்போது, ஒரு மூடை மைசூர்ப்பருப்பு, 2 மூடை உருளைக்கிழங்கு, 50 கிலோமாசிக்கருவாடு சோதனை செய்தவர்களா எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. [க]

## "தீவிரவாதிகளை தேடிச்செல்லவேண்டாம் நேரில் வந்தால் மட்டும் தாக்கவும்!''

### ஆயுதப் படையினருக்கு பணிப்புரை

(கொழும்பு)
"தமிழ்த் தீவிரவாதிகளின் மறைவிடங்களைத் தேடிச்செல்ல வேண்டாம் நேரில் வந்து தாக்கினல் மட்டும்அவர்களுடன் மோதவும்'' என்று ஆயுதப்படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பமைச்சு இந்த உத்தரவை விடுத்துள்ளது.

பாதுகாப்புப் படைகள் தீவிரவாதிகளின் மறைவிடங்களைத் தேடிச் செல்லும்போது ஏற்படும் வீண்சேதங்களைத் தவிர்க்கும் வகையிலேயே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்

5-ம் பக்கம் பார்க்க]

# திருமலையில் திடீர்த்திடீரென மறையும் தமிழர்கள்!

(திருகோணமலை)
திருகோணமலைப் பகுதியில் கடந்த சில நாட்களாக திடீர் திடீரெனத் தமிழர்கள் காணாமல்போவது குறித்து அச்சம் தெரிவிக்கபடுகிறது.

இதுவரை 15-க்கு மேற்பட்ட தமிழர்களை இப்படிக் காணவில்லையாம்.

ஒரு கோஷ்டியினர் தங்கள் கண்களில் படும் தமிழர்களைக் கடத்திச்சென்று பின்னர் கொலைசெய்துவிட்டுகடற்கரை ஓரங்களில் புதைத்துவருவதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது

இச்சம்பவம் குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணை நடத்தியதுடன், குறிப்பிட்ட கோஷ்டியினரை வெளியேறுதவாறு தடுத்திருப்பதாக ஒரு தகவல்தெரிவிக்கிறது (ரா-மா)

## இனப் படுகொலை பற்றி 'வீடியோ' திரைப்படம்

(சென்னை)
திருகோணமலையிலுள்ள சில பகுதிகளில் அண்மையில் நடந்த இனப்படுகொலை சம்பந்தமான 'வீடியோ' திரைப்படம் சென்னையில் பல இடங்களிலும் திரையிட ஒழுங்குகள்

(5-ம் பக்கம் பார்க்க)

## தடைமுகாமில் பலத்த சோதனை

(யாழ்ப்பாணம்)
நாவற்குழி தடைமுகாமில் நேற்றுக்காலை வாகனங்களில் வந்த பிரயாணிகள் ஆயுதப் படையினரால் சோதனையிடப் பட்டனர்.

இரு பக்கத்திலும், பஸ், லொறி, மினிபஸ், ட்ராக்டர், கார், வான் உட்பட சுமார் 50 வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டன.

பஸ்பிரயாணிகள் பஸ்ஸிலிருந்து இறங்கி ஆயுதப்படையினரின் சோதனைக்குப் பின்னர் பஸ்ஸில் ஏறிச்சென்றனர்.

பிரயாணிகள் தேசிய அடையாள அட்டைகளை வரிசையாக நின்று காட்டிய பின்னர் பஸ்ஸில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க)

## யாழ். நீதவான் நீதிமன்ற களஞ்சிய அறையில் பெரும் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)
யாழ். நீதவான் நீதிமன்றத்தின் களஞ்சிய அறை உடைக்கப்பட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த ஏராளமான சைக்கிள்கள், தட்டச்சு இயந்திரங்கள், சுவர்மணிக்கூடு ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்றுப் பிற்பகல் 3-30க்கும் 5 மணிக்குமிடையில் இரு தடவைகள் தொடர்ச்சியாக இக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது.

இருதடவையாக வாகனங்களில் இப்பொருட்கள் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இனம் தெரியாத சுமார் 15 நபர்களைக்கொண்ட கோஷ்டியினர் நீதிமன்ற வளவுக்குள் புகுந்து தொலைபேசி

(5-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### பயிற்சி

மூன்று வருட மருத்துவ தாதிப் பயிற்சி ஆங்கிலமொழி மூலம் எதிர்வரும் ஆவணி மாதம் 30ம் திகதி (30-8-85) ஆரம்பமாகவுள்ளது. குறிக்கப்பட்ட தொகையினரே அனுமதிக்கப்படுவர். நேரில்வந்து பதிவுசெய்துகொள்ளவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (128)

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி 1984—தொடர் II ஆரம்பமாகவுள்ளது. G.C.E சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். குறித்த தொகையினர் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர். குடாநாட்டுக்கு வெளியே உள்ளவர்களுக்கு தபால்வழியும் கற்பிக்கப்படும். பாலர் ஆசிரியர் சங்கம், 610 (418), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (132)

## விற்பனைக்கு

சண்டிலிப்பாய் வடக்கு 6 பரப்பு வீடு கட்டும் காணி. விரும்புவோர் P. இலங்கைநாதனுடன் சண்டிலிப்பாய் வடக்கு தொடர்பு கொள்ளவும். 167

1 நாள் குஞ்சுகள் விற்பனைக்கு தேவைப்படுவோர் உடன் தொடர்புகொள்ளவும். இரத்தினமாளிகை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். ந. ஸ்ரீதரன், தெணியம்பை, வல்வெட்டித்துறை. (141)

வடலியடைப்புப் பண்டத்தரிப்பு பூம்பதி வீதியில் இரண்டு பரப்புக்காணியில் மூன்றுபக்க மதில், தனிக்கிணறு, தண்ணீர் தாங்கி, மின்சாரவசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. நித்தியானந்தன், "காங்கேஸ்பதி", வடலியடைப்பு, பண்டத்தரிப்பு 133

## தேவை

கிரைண்டிங் மில்லில் அனுபவமுள்ளவர்கள் தேவை. நேரில் வரவும். மஞ்சு கிரைண்டிங் மில், புளியங்கூடல் சந்தி, ஊர்காவற்றுறை. 146

இனிப்புகள் தயாரிக்கும் கைமெஷின் அச்சுகளுடன் தேவை. தொடர்பு: கு. விக்கினராஜா, மே/பா. செ. இராஜகோபால், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. 157

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### இராமநாதன் நுண்கலைப்பிரிவு
### அறிவித்தல்

இராமநாதன் நுண்கலைப் பீட முதலாம், இரண்டாம் வருடப்பரீட்சைகள் செப்டம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாகும். முதலாம் வருட மாணவரின் பிற்போடப்பட்ட பரீட்சை செப்டம்பர் 2ஆம் திகதியும், இரண்டாம் வருட பரீட்சை செப்டம்பர் 3ஆம் திகதியும் ஆரம்பமாகும்.

பதிவாளர்.

170

## மணப்பந்தல்

யாழ். இந்து வேளாளர் இனத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நல்ல தொழில் பார்க்கும் மணமகனுக்கு 18வயதுக்குட்பட்ட கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த அழகிய குணம் உள்ள மணமகளை தேடுகிறார்கள். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. அண்மையில் எடுத்த புகைப்படம், ஜாதகம் ஏனையவிபரங்களுடன் முதற்கடிதத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 165, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 165

## தவறிவிட்டது

லோறன்ஸ் மரியைப்பிள்ளை அல்லது தம்பிரெத்தினம் என்பவருடைய தேசியஅடையாள அட்டை, வங்கிப்புத்தகம், வங்கிப் பற்றுச்சீட்டு என்பன தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். இல. 63/2, மவுண் கார்மேல் ரோட், குருநகர், யாழ்ப்பாணம். 160

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## திருமணத் திருமுகம்

மணமகன்: பாலசுப்பிரமணியம்
மணமகள்: ரதிதேவி

இடம்:
புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயம்

காலம்:
22-08-1985 வியாழக்கிழமை
காலை 7-30 மணிக்கும் 9-00 மணிக்குமுடையில் வரும் சுபவேளை

உறவினர், நண்பர்களனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

திரு. சி. வேலாயுதமும் குடும்பமும், கைதடி மேற்கு, கைதடி.

திரு. சு. சபாரத்தினமும் குடும்பமும், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

(4993)

## 31-வது நாள் நினைவஞ்சலி
## திருமதி இ. தையல்முத்து

சுழிபுரம்

முன்னாள் முறட்டுவ "ரட்ணம்ஸ்" உரிமையாளரும், இன்னாள் சுழிபுரம் "ரட்ணம்ஸ்" உரிமையாளரும் ஆகிய திரு. வீ. க. இராசையாவின் அன்பு மனைவி

தோற்றம்- 1510-1920 மறைவு: 23-8-1985


எங்கள் குடும்ப விளக்காயும் எவீர் நிழலாயும் இருந்து எங்கள் எல்லோரையும் வழி நடத்திய அன்புத் தெய்வமே! எம்மை எப்படி மறந்தீரோ யாமறியோம், தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

"இராஜபவனம்",
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (182)

## 31-ம் நாள் நினைவஞ்சலி
### 18-08-1985
### அமரர் திரு. செல்லையா தம்பையா

அன்னையின் மடியில்
19-10-1926



ஆண்டவன் அடியில்
19-07-1985

எங்கள் குடும்பத் தலைவனாய், தெய்வமாய் ஒளிவீசி எம்மையெல்லாம் வழிநடத்தி திடீரென மறைந்தாலும் உங்கள் அன்பும், பண்பும், பாசமும் எங்கள் கண்முன் நிழலாடிக் கொண்டேயிருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

தகவல்:- சகோதரன் வேலுப்பிள்ளை.

தண்ணீரூற்று,
முள்ளியவளை. 119

## திருமண அழைப்பு

உ

மணமகன்: செல்வன் குகநேயன் (ஆசிரியர், நைஜீரியா)
மணமகள்: செல்வி கமலா (ஆசிரியை, நைஜீரியா)

இடம்:
காங்கேசன்துறை குருநாதர் கோவில்

காலம்:
22-08-1985 வியாழக்கிழமை காலை 6-05 மணி

வரவேற்பு:
மணமகன் இல்லம்
23-08-1985 வெள்ளிக்கிழமை மாலை

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. வை பொன்னையா, அதிபர், பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயம், தெல்லிப்பழை.

திரு. வே க நடராஜாவும் (இளைப்பாறிய மது பரிபாலன பரிசோதகர்) பாரியாரும், குருவீதி. காங்கேசன்துறை.

(172)

## ஓராண்டு நினைவஞ்சலி
## Captain C. மோகனதாஸ்

படைப்பு:
14-09-1945



அழிப்பு:
01-09-1984

திதி: 22-08-1985

உத்தமனே! உனைப்பிரிந்து ஆண்டொன்று மறைந்ததய்யா. எமது உயிர் உள்ளளவும் நின் மலர்ந்த முகமும், மாசற்ற செயலும் எம் மனதைவிட்டகலாது.

நின் பிரிவால் எல்லையில்லா துன்பமடையும்
தாய், மனைவி, மகன், சகோதரங்கள்.

மணல்வளவு,
வல்வெட்டித்துறை. (136)

## நினைவஞ்சலி
## குலசேகரம் தேவசேகரம்
## (ஒபரேய் தேவன்)



மலர்வு:
1958-04-17

உதிர்வு:
1983-08-14

சொகுசான வாழ்வைவிட்டு வெகுதூரம் ஓடிவந்து
போராடக்குதித்த உன் சிந்தனையின் தெளிவு
களத்துக்கே வந்து நின்று
முற்போக்கு சக்திகளை சல்லடையில் வடித்தெடுத்து
புரட்சிக்கு இழுத்தெடுத்த உன் திறமை
குழுக்களாய் பிரிந்து நின்ற
போராட்ட சக்திகளை ஒன்றிணைக்க வேண்டுமென்று
விடாப்பிடியாய் நீ எடுத்த முயற்சி
தேவா...
மறக்கமுடியுமா உன் கடமைகளை
மறக்கமுடியுமா உன் திறமைகளை
துறக்கமுடியுமா உன் சிந்தனைகளை
உன் இலட்சியப்பயணத்தை
இறுதிவரை சென்றுமுடிக்க
நாம் கொண்ட சபதங்களை - இன்று உன்
புரட்சித்திருவடிகளில்
அர்ச்சனைப்பூக்களாக்கி ஆராதனை செய்கிறோம்.

தோழர்கள்

174

# அகாலிதள் தலைவர் ஹர்சன்சிங் லோங்கோவால்
# இரு சீக்கியரினால் சுடப்பட்டு இறந்தார்!

## பஞ்சாப் 2நாள் துக்க தினம் மக்கள் பலத்த கவலை

(சங்குரூர்)

**சீக்கியர்களின் மிதவாதியும், அகாலிதள் கட்சியின் தலைவருமான மான சன் ஹர்சன்சிங் லோங்கோவால் இரு சீக்கியர்களினால் சுடப்பட்டு நேற்று முன்தினம் இரவு சங்குரூர் மருத்துவமனையில் காலமானார்.**

நேற்று முன்தினம் மாலை சங்குரூர் மாவட்டம் சர்ப்பூர் கிராமத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் பேசிக்கொண்டிருக்கையில்சுடப்பட்டார். மாலை 6 மணியளவில் அவர் சங்குரூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். சண்டிகாரிலிருந்து விசேட மருத்துவ நிபுணர்கள் அங்குசென்று அவருக்குச் சிகிச்சையளித்தபோதிலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. இரவு 8-45மணிக்கு அவர் காலமானார்.

லோங்கோவாலுக்கு வயிற்றிலும், தோள்மூட்டு, கைகள் ஆகியவற்றிலும் சூட்டுக் காயங்கள் இருந்தன. தோள் மூட்டிலிருந்து ஒரு குண்டுஅகற்றப்பட்டது ஆயினும் இதயத்திற்குக் கீழ்க் காணப்பட்ட ஓர் குண்டு அகற்றப்படவில்லை

1932ம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி சங்குரூர் மாவட்டம் ஹற்ஜானி கிராமத்தில் பிறந்த லோங்கோவால், இறு வயதிலிருந்தே சீக்கிய மதப்பற்றுள்ளவராகஇருந்தார். இளமையிலேயே சீக்கிய மத குருமாரிடம் சீக்கிய மத நெறிகளைக் கற்று அதன்படி வாழ்ந்துவந்தார்.

1976ம் ஆண்டு அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலையின்போது பல அகாலிதள் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த சமயம் பஞ்சாபில் கிளர்ச்சியொன்றை நடத்தி இந்திய மக்கள் மத்தியில் பிரபல்யமானார். பின்னர் 1982ல் அகாலிதள் கட்சியின் கோரிக்கைகளை இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்துவதற்காக மற்றொரு கிளர்ச்சியை அவர் தலைமைதாங்கி நடத்தினார்.

பஞ்சாப்பில் நான்கு ஆண்டுகள் நிலவிவந்த மிகப்பெரிய நெருக்கடியைத் தீர்த்துவைக்கும் முகமாக அவர் கடந்த மாதம் 24-ம் திகதி இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பஞ்சாப் உடன்படிக்கையை மேற்கொண்டதன் மூலம் இந்தியாவின் தேசிய தலைவர்களில் ஒருவராகவும் மதிக்கப்பட்டார்.

இவரது சடலம் நேற்று மாலை அவர் பிறந்த இடமான லோங்கோவால் கிராமத்தில் அடக்கம்செய்யப்பட்டது.

இவரது மறைவு குறித்து பஞ்சாப் அரசு இரண்டுநாள் துக்கதினம் அனுஷ்டிக்கவுள்ளது. இந்த இரு நாட்களும் பஞ்சாப்பில் சகல அலுவலகங்களும், கடைகளும், நிறுவனங்களும் மூடப்பட்டிருக்கும்.

இவரது மறைவு குறித்து இந்தியாவின் பிரதமர், ஜனாதிபதி உட்படப் பல மாநில முதலமைச்சர்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதோடு இந்திய மக்கள் அனைவருமே துயரம் அடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர் என்று இந்தியாவிலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவரைச் சுட்ட இருவரும் பிடிபட்டுள்ளனர். மல்விந்த சிங் (வயது 25), பால்சிங் (30 வயது ஆகிய இருவருமே லோங்கோவாலைச் சுட்ட சீக்கியர்களாவர் இவர்கள் சுட்டதில் இன்னொருவர் இறந்தார். ஏழு பேர் காயமடைந்தனர் சுட்டவர்களில் ஒருவருக்கும் காயமேற்பட்டுள்ளது

இவரைச் சுட்டவர்கள் சீக்கிய தீவிரவாதிகள் என நம்பப்படுகிறது. ஆயினும் இவர்கள் விசாரணையை இந்தியப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உலகச் செய்திகள்

## பல மாநிலங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

(புதுடில்லி)

அகாலிதள் தலைவரின் மறைவினால் பஞ்சாப் மாநிலம் மற்றும் சில மாநிலங்களில் ஏற்படக்கூடிய நிலைமைகளைச் சமாளிப்பதற்காகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம், டெல்லி, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஏற்படக்கூடிய எந்த நிலைமையையும் சமாளிக்க மாநில அரசுகள் உடனடியாக இராணுவத்தை அழைக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சு உத்தரவுபிறப்பித்துள்ளது

இந்நிலைமைகளை விவாதிப்பதற்காக மத்திய மந்திரிசபை நேற்றுக் கூடி ஆராய்ந்தது.

## ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர்கள் ஆழ்ந்த அனுதாபம்

(புதுடில்லி)

அகாலிதள் தலைவர் சன் ஹர்சன்சிங் லோங்கோவால் திடீர் மறைவு குறித்து ஜனாதிபதி திரு. ஜானி ஸெயில் சிங், பிரதமர் திரு ராஜீவ்காந்தி மற்றும் பல இந்தியத்தலைவர்கள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளனர்

ஜனாதிபதி திரு ஜானி ஸெயில் சிங் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இந்தியாவின் ஒற்றுமையைபாதுப்பதில் மறைந்ததலைவர் பெரும் பங்கு கொண்டிருந்தார். சீக்கிய மதத்தில் அன்பு, தோழமை, ஒற்றுமை ஆகியவற்றின்படி வாழ்ந்து இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாத்தார் என்றார்

பிரதமர் திரு ராஜீவ் காந்தி தமது அனுதாபச் செய்தியில் "மறைந்த தலைவர் பஞ்சாப்பில் ஏற்பட்ட நெருக்கடியை தீர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி அவரை ஓர் உயர்ந்த தலைவராக்கிவிட்டது அவர் இந்தியாவின் சிறந்த தவப்புதல்வர்களில் ஒருவராவார். அவர் பேணிகாத்த ஒற்றுமையைப் பாதுகாத்து அமைதியாக இருப்பதே அவருக்கு மக்கள் செய்யும் இறுதிக்கடனாகும் மக்கள் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு வங்க முதலமைச்சர் திரு ஜோதி பாசு, ஆந்திர முதலமைச்சர் திரு. என் டி. ராமராவ், கர்னாடக முதலமைச்சர் திரு. இராமகிருஷ்ண ஹக்டே, ராஜஸ்தான் முதலமைச்சர் திரு ஹரிதேவ் ஜோசி ஹரியானா முதலமைச்சர் திரு. பஜன் லால், தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன். தி மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி உட்பட பல இந்திய தலைவர்கள் தமது அனுதாபச் செய்திகளை தெரிவித்துள்ளனர்.

பல சீக்கிய மதத் தலைவர்களும் இவரது மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

## இரண்டாவது எம்.பி.பி.எஸ். பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இரண்டாவது ஆண்டு பரீட்சை முடிவுகள் வெளிவந்துவிட்டன. சித்திபெற்றோர் விபரம் வருமாறு:

**முதலாம் வகுப்பு சித்தி**

என். பாலசுப்பிரமணியம் [Biochemistry, Physiology ஆகிய பாடங்களில் அதிவிசேட சித்தி]

சி. டி. பரராஜசிங்கம் [Anatomy, Biochemistry Physiolgy ஆகிய பாடங்களில் அதி விசேட சித்தி]

**இரண்டாம் வகுப்பு சித்தி:**

எஸ் அருள்பிரகாசம், டி. பி. அருள்ராஜா, ரி. ஆதித்தன், ஜி ஆர். கொன்ஸ்ரன்ரின், எஸ். கோபாலசுந்தரம். ஜே கந்தசாமி, ஆர். லம்போதரன், எஸ். மோகன், கே நடராசா, எஸ். இராஜலிங்கம், கே: இராஜரட்ணம், ஜே சி. பி. இராஜேந்திரா, வி. ரி. இராஜேந்திரன், கே ரஞ்சபாபு, ஆர். இராமலிங்கதேவர், என். செந்தில்ராஜ், பி. சின்னத்தம்பி, ரி. சூரியகுமாரன், பி. சுபாகீசன், கே. சுப்பிரமணியம்' வி. சுவர்ணகுமார்.

**சித்தி பெற்றோர்:**

எம். பாலசிங்கம், கே. ஏரம்பரமூர்த்தி, என். ஜனகன், எல். பி ஜோன்பிள்ளை, ஏ. கணபதிப்பிள்ளை, ரி. கடோற்ஜன், எஸ், கணபதிப்பிள்ளை, ரி குகதாசன், கே லிங்கேஸ்வரன், எஸ். நவீனகுமார், கே. இராஜரத்தினம், ஆர். இரத்தினசபாபதி, ஜி செல்வரத்தினம், பி. சேந்தன், கே: ஸ்ரீரட்ணகுமார், எம். தம்பிப்பிள்ளை, ஜே. வேலுப்பிள்ளை, பி: வைரமுத்து. பி யோகேஸ்வரன், கே. பொன்னுசாமி எம், தமிழ்தாசன், எம. எம். அப்துல் அசீஸ், எல். அன்புதாசன், எஸ். சந்திரபாலன், எஸ். வேங்கட்சாமி. (ச)

## ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 சிறுவர் நிகழ்ச்சி
5-30 'பிரஹேலிகா' வாராந்தபுதிர் நிகழ்ச்சி
6-00 'ஏ வோர் புரம் தஏயா' (ஆங்கிலம்)
6-30 செய்திகள் (தமிழ்)
6-50 காலங்கள் (நாடகம்)
7-25 'ராச கலச' (சிங்களம்)
8 00 செய்திகள் (சிங்களம்)
8-25 'சதுடு கண்டுல' (சிங்கள நாடகம்)
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-55 'அகட கனட' (சிங்களம்)
10-20 ஒளிபரப்பு முடிவு.

## கொள்ளை!

(மட்டக்களப்பு)

கல்குடா ரயில் நிலையத்தில் 598 ரூபா இனந்தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது,

நேற்று இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது. (மா)

## மடுக்காட்டில் காணாமல்போன பெண்ணின் சடலம்

(மன்னார்)

மடு ரயில் நிலையப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின்போது காணாமல் போன 19 வயது இளம்பெண் மடுக் காட்டுக்குள் இறந்தநிலையில் நேற்றுக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளார் இப்பெண்ணுடன் காணாமல் போன 12 வயதுச் சிறுவன் அப்பகுதியில் உள்ள குடிசையிலிருந்து மீட்கப்பட்டுள்ளான்.

இளம்பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியிலிருந்த 90 சிங்கள இனத்தவர் நேற்று அவர்களது சொந்த விருப்பத்தின் பேரில் அனுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (மா)

## அகதிகள்

(மன்னார்)

வவனியாவிலுள்ள செட்டிகுளம், நேரியகுளம் பகுதிகளிலிருந்து 600 தமிழ் அகதிகள் மன்னாருக்குச் சென்றுள்ளனர்

மடு தேவாலயத்திலும். 90 பேரைக் கொண்ட தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த அகதிகளுக்கு உணவு மற்றும் சுகாதார வசதிகளை மன்னார் அரசாங்க அதிபர் ஜனாப் எம் எம். அப்துல் காதர் கவனித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மினி வான் மோதி சிறுவன் பலி

[யாழ்ப்பாணம்]

மிக வேகமாகவந்த மினி வான் ஒன்று கோப்பாய் தெற்கு நாவலடியில் ஒரு சிறுவனை மோதியதால், அச் சிறுவன் ஸ்தலத்திலே உயிரிழந்தான்.

இராசதுரை இரங்கநாதன் என்ற 13 வயதுச் சிறுவன் கடைக்கு உணவுப் பொருள்கள் வாங்கச் சென்ற சமயம் இச் சம்பவம் இடம்பெற்றது.

சிறுவனை மோதிய மினி வான் சுமார் 100 யார் தூரம் சென்றே தரித்து நின்றது. சிறுவனின் கால் பகுதியும் சிதறிய நிலையிலேயே மீட்கப்பட்டது. [பி]

**மணிவாக்கு**

மனிதனை மனிதனுக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல; இடையூறுகளும் துன்பங்களுமே.

—மத்தியூஸ்

# நமது நோக்கு

## மானியக்குழு தயங்குவதேன்?

மானியக்குழுவென்ற பெயரிலேயே மினக்கேடு என்பது தொக்கு நிற்கின்றது.

உயர்கல்வி இந்நாட்டின் துரிதவளர்ச்சிக்கு இன்றியமையாத துறை. இதற்கு முழுப் பொறுப்பேற்றிருக்கும் பல்கலைக்கழக மானியக்குழு எவ்வித அரசியல் தலையீடுமின்றி சுயமாக இயங்கும் ஸ்தாபனம்.

நாட்டின் ஜனாதிபதியே உயர்கல்வி அமைச்சரென்பதால் நியாயம் வழங்கும் பொறுப்பு நிர்வாக ரீதியிலும் இறுக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய மானியக்குழுவின் நிர்வாகத் தொல்லைகள் பெருகிவருவதை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். அதிகரித்துவரும் மாணவர் தொகை; பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிலையங்களின் அபிவிருத்தியும் புனரமைப்பும், இவற்றிற்கு தேவைப்படும் நிதி, இன்று நாடிருக்கும் நிலைமையில் இவையெல்லாம் எந்தச் சுதந்திரமான திறமையான ஸ்தாபனத்தையும் அசைத்துவிடும் தன்மையன.

எந்தப் பல்கலைக்கழகத்திலும் எந்தப் புதுவசதியும் நிதியென்ற காப்டனுக்குக் கட்டுப்பட்டதே. அதேசமயம் அவசியமற்றதென்ற காரணம் காணப்பட்டால் நிதி பற்றுக்குறை முடிவுக்கு உறுதியளிக்கும்.

உள்ளத்துக்குள் வள்ளிசாக என்று எங்கள் மக்கள் சொல்வது போல் தேவைகளின் அவசியம் முன் உரிமை பெற வேண்டும்; அதேசமயம் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் அனுதாபம் கூடுவதல்லாது குறைவது இன்றைய சூழ்நிலையில் தர்மமாகாது.

வடபகுதியே இன்றைய நாட்டின் குழப்பநிலைக்குக் காரணமென்ற துவேஷம் பல்கலைக்கழக மானியக் குழுவை நிச்சயம் பாதிக்காது. ஆனால் பாகுபாடு போல் தோன்றும் முடிவுகள் இன்றைய கட்டத்தில் தவிர்க்கப்படுவது உசிதமென்பதை நாம் மானியக் குழுவிற்குவற்புறுத்தவேண்டும்.

பல்கலைக் கழகத்துக்குள் அரசியல் உலாவுவதை எவரும் தடுக்கமுடியாது; ஆனால் பல்கலைக்கழக சமூகம் அவ்வித சுற்றுலாவால் பாதிக்கப் படாதிருக்கும் சூழ்நிலை அங்கு நிலவவேண்டும்.

இதற்கு நிர்வாகத்தின் தலைமைப்பீடமான மானியக்குழு எடுக்கும் நடவடிக்கைகள் நன்கு உதவலாம்; எடுக்கத்தவறும் முடிவுகள் சூழ்நிலையை பழுதடையவும் செய்யலாம்.

விடயத்துக்கு நேரில் வருவோம்:

1984-ல் பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்திய வெளிவாரிப் பட்டப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவில்லை. நாட்டு நிலைமை காரணமாகப் பரீட்சார்த்திகள் தென்னிலங்கைப் பரீட்சை நிலையங்களுக்குப் போக முடியவில்லை.

இந்த நிலை நீடிக்காது இதற்கொரு வழி காண்பது மானியக் குழுவின் பெரும் பொறுப்பு. நிதி தடையாகவிருக்கலாமென்று நாம் நம்பவில்லை.

இதனை ஒரு சிறு விடயமாகக் கருதுவது எவ்வகையிலும் நியாயமாகாது வருகிற டிசம்பரிலும் சென்ற ஆண்டின் துர்க்கதி இம் மாணவருக்குத் தொடருமானால் வடக்குக் கிழக்கு மாணவர்களின் நியாயமான கோரிக்கை அங்கீகரிக்கப் படுவதில்லையென்று ஒரு கிளர்ச்சி உருவெடுப்பது இயற்கை.

பேராதனையில் மூன்று மொழிகளிலும் வெளிவாரித் தேர்வுகள் நடைபெறுகின்றன. எனவே வேறு எங்கும் நடத்தவேண்டியதேன் என்ற வினா இன்றைய நிலைமைக்குச் சற்றும் பொருத்தமற்றது.

ஒன்று; பேராதனையை எட்டிப் பார்க்க முடியாத குழப்பநிலை அடிக்கடி ஏற்படுகின்றது. இது தற்காலிகமானதானாலும் பல மாணவரைப் பாதிக்கின்றது.

மற்றது மிகவும் முக்கியமானது. யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று நெடுங்காலமாக வாதாடிய தலைவர்கள் இந்த ஒன்று என்றும் போதுமே என்று கனவிலும் நினைத்திருக்கார்கள்.

பல்கலைக்கழக அனுமதி மிகத் தீவிரமாகக் கட்டுப்படுத்தப்பட்ட போதும், தகைமையுடையவர் அநேகம். எல்லோரும் வெளியூர் சென்று இங்கு பெறமுடியாத வெற்றிகளை லண்டன் போன்ற பல்கலைக்கழகங்களில் பெறமுடியாது.

பல்கலைக்கழகப் படிப்பும் பயிற்சியும் மாணவனின் பூரண வளர்ச்சிக்கு இன்றியமையாதது. அது முயற்கொம்பென்றால் வெளிவாரிப் பரீட்சையில் தஞ்சம் புகவேண்டும். அந்தப் பணி இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மிக அவசியம்.

கடந்த 50 வருட காலத்தில் லண்டன் நடத்திய வெளிவாரிப் பரீட்சையே இன்றும் இந்த நாட்டில் பெரும் பதவிகள் வகிக்கின்ற தலைவர்களுக்கு உதவியது. அவற்றுள் பலர் யாழ்ப்பாணத்தவர் என்பதை மறக்கலாகாது.

எனவே யாழ்ப்பாணம் மட்டுமல்ல தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்திலும்காணப்படும் பெருந்தொகையான மாணவர்களுக்கு வெளிவாரிப் பரீட்சை அமைப்பு மிக அவசியமானது.

இதனை எதிர்மறையாகப் பார்க்கின் தமிழ்ப் பட்டதாரிகள் தொகை தொப்பென விழும் அபாயம் குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழகம் இதற்குரிய அனுமதியைக் கோரியிருப்பதே நிலைமையைத் தெளிவுபடுத்துகிறது.

பயங்கரவாதப் பிரதேசம் என்பது உண்மையானாலும் கசடறக் கற்கும் கல்வி நிலைமையைச் சீராக்கும். ஆதாரமற்ற கருத்துக்களால் மானியக்குழு தனது அவசியமான பொறுப்பைக் கைவிடமாட்டாதென நம்பலாம்.

---

யாழ். நீதிமன்றத்தில்

# ஒரு வருடத்தின் பின்னர் இரு வழக்குகள் தாக்கல்

[யாழ்ப்பாணம்]

ஒரு வருடத்திற்குப் பின்னர் முதல் தடவையாக யாழ். நீதிமன்றத்தில் பொலிஸார் இரு வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஒரு வழக்கில், 85 ஆகஸ்ட் 14 ம் தேதி யாழ். ஆஸ்பத்திரியில் டாக்டர் உருத்திரா ஜெயரத்தினத்தை கடமை செய்யவிடாது தடுத்து வாக்குவாதப்பட்டதாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரெஜினோல்ட் ரவீந்திரகுமார் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

மற்ற வழக்கில் 85 ஆகஸ்ட் 15 ம் திகதி யாழ் பண்ணை பொலிஸ் விடுதியைச் சேர்ந்த செ. சந்திரகுமார் பொலிஸ் கான்ஸ்டபிள் நடராசா என்பவர் குடியிருக்கும், பொலிஸ் திணைக்களத்திற்கு சொந்தமான வீட்டை ஒரு குற்றத்தை செய்யும் நோக்குடன் உடைத்து உள்ளே சென்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் இ. நாகராசா முன்னிலையில் நேற்று முன்தினம் இரு வழக்குகளும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்குகளில் எதிரிகள் பிணை காரருடன் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு, முதல் வழக்கு அடுத்த மாதம் 30-ம் தேதிக்கும் மற்ற வழக்கு அடுத்த மாதம் 6-ம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

பதட்டநிலை காரணமாக கடந்த ஒரு வருட காலமாக பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குகளை தாக்கல் செய்யவில்லை எனக் கூறப்படுகிறது.

---

நல்லூர் உள்வீதியில்

## பக்தர்களே தங்களை வழிநடத்த வேண்டும்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தசுவாமி கோவில் தீர்த்தக்கேணி உள்ளடக்கி ஒரே அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

பக்தர்கள் உள்வீதியில் தங்களைத் தாங்களே வழிநடத்தும் நிலையை உருவாக்க வேண்டும், உள் வீதியில் தொண்டர்கள் வழிநடத்துவது இம்முறை தவிர்க்கப்பட்டுள்ளது.

நல்லூர் உற்சவத்தையொட்டி யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி வீ. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோவிலுக்கு வரும் பெண்கள் கூடியளவு தங்க நகைகளை அணிவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கோவில் நான்குபக்க வீதிகளிலும் தடை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தடைமுகாமிலும் 2 மாநகர சபை ஊழியரும்' சென் ஜோன் அம்புலன்ஸ் படையும், சாரணர்' இந்து இளைஞர் மன்றம், வேறு தொண்டர் இயக்க பிரதிநிதிகள் கடமையாற்றுவார்கள்.

வழக்கமான சுகாதார ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

---

## கும்பாபிஷேகம்

(சரவெட்டி)

கரணவாய் வடக்கு எள்ளங்குளம் நாச்சிமார் கோவில் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

---

# அரிய மனிதர்களில் ஒருவர்

''உள்ளத்தில் உண்மைமொழி உண்டானால் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்ற கவியின் அர்த்தத்தை அவரது பேச்சின் தொனி உணர்த்துவதுபோல நான் உணர்ந்திருக்கிறேன்.

அவருள் நிறைந்து ததும்பிய இசை ரசனை, சமய தத்துவம், பத்திரிகைத்துறை அனுபவம், யோகாப்பியாசம், மேல்நாட்டனுபவங்கள், அரசியல் அறிவு இவைகளெல்லாம் தோய்ந்த அவரது ஆன்மாவின் நாதமாகவே அவரது குரலை நான் சுவைப்பதுண்டு.

அந்தஆத்மநண்பர் பெரியார் மதிப்பிற்குரிய திரு. பி. எஸ். செட்டியார் அவர்கள்தான்.


வயதடைந்தாலும் கட்டுக்குலையாது அவரது உடல் விளங்கியது. அந்த வீர உடம்பின் வதனத்தில் எந்நேரமும் அமைதி தவழும்.

செட்டியாரிடம் பல திறமைகள் திகழ்ந்தன. அவற்றோடு மொழி, கலாசாரம், இனம் என்ற அபிமானம் கமழ்ந்தன. அதனால் எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் அவரிடம் அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர்.

அவர் பத்திரிகையில் பணிபுரிந்தவர். அவர் செய்திகளை அபார நுட்பத்தோடு கையாண்டதன்மை எல்லோரையும் கவர்ந்தது. வெறும் கவர்ச்சியல்ல. அதில் ஆழம்; மெருகு; பண்பு; சுவை.

இத்திறமை அவருக்கு அமெரிக்க தூதுவரகத் தகவல் பொறுப்பதிகாரி பதவியை வழங்கியது.

செட்டியார் சிறந்த சமூக சேவை மனப்பான்மையுடையவர், எவராவது ஒருவர் அவரிடம் ஏதோ ஒரு விடயமாக எந்நேரத்திலும் வந்து பேசிக் கொண்டிருப்பார். கடைச்சாமி



சிவன்கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம்செய்யும் புனித பணியில் அவர் ஈடுபட்டு உழைத்து புனிதன் திருவடி நீழலைச் சென்றடைந்துவிட்டார்.

செட்டியார் போன்ற மனிதர்கள் சிலரையே நாம் வாழ்வில் காண்கிறோம். அவர்போல் பலர் இன்று எமது இனத்திற்குத் தேவை.

"கே. எம்."

---

தூதரகங்கள், பாடசாலைகளுக்கு

# இரத்தக் கையெழுத்துடன் அச்சுறுத்தல்கள்!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சில தூதராலயங்களுக்கும், முன்னணிப் பாடசாலைகள் சிலவற்றுக்கும் அவை தாக்கப்படுமென அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தத்தில் கையெழுத்திட்ட கடிதங்களிலேயே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதுடன் அவற்றோடு சுவரொட்டிகளும் சேர்த்து அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. தமிழ் இயக்கம் ஒன்றின் பெயரிலேயே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாம்.

அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தூதராலயங்களில் கனடா, ஜப்பான் ஆகியனவும் அடங்குகின்றன,

கொழும்பில் உள்ள சிலமுன்னணிப்பாடசாலை அதிபர்களும் இந்த அச்சுறுத்தல் குறித்து கவலை வெளியிட்டனர். புதிய தவணைக்காக பாடசாலை ஆரம்பமாகும் போது தமது பாடசாலைகளுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கும்படி அவர்கள் பாதுகாப்பு வட்டாரங்களைக் கேட்டுள்ளனர்.

பொலிஸ் பகுதியின் இந்த அச்சுறுத்தலை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர் இது சம்பந்தமாக புலனாய்வுகள்

(5-ம் பக்கம் பார்க்க)

---

## தினம்தோறும் உன்புகழ் பாடியே பணிந்தேன்

ராகம்: ஜயந்துவராளி தாளம்: ஆதி

பல்லவி

என்னதான் குறையோ என்னதான் தடையோ!
என்னையாள்வதிலே நல்லைவாழ் முருகா! (என்ன...)

அனுபல்லவி

உன்துணை நிலையென உனதடி அடைந்தேன்!
உன்துணை இல்லையெனில் ஏதும்நான் அறியேன்!!
(என்ன...)

சரணம்

கணம்தொறும் உன்பெயர் ஓதியே நினைந்தேன்!
தினம்தொறும் உன்புகழ் பாடியே பணிந்தேன்!!
தலம்தொறும் உன்னையே தேடியே அலைந்தேன்!
யுகம்தொறும் நல்லையில் வளர்கதிர் வேலனே!!
(என்ன ..)

"முருகு"



வவனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட வன்செயலின்போது பாதிப்புற்று, அகதிகளாக வெளியேறி கிளிநொச்சியில் தஞ்சமடைந்தவர்களில் ஒரு பகுதியினரை இங்கு காணலாம், தங்களுக்கு ஏற்பட்ட அவல நிலையை, கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் விபரமாக கூறுவதை இரண்டாவதுபடத்தில் காணலாம். (கடைசிப்பக்கமும் பார்க்க)

## 'இன்ரசிற்றி' விபத்து:

# அதிசயிக்கும்விதத்தில் ஒரு கூட்டம் பயணிகளுக்கு உதவி!

(கொழும்பு)

நேற்று முன்தினம் மதவாச்சியருகே கடுகதி ரயில் விபத்துக்குள்ளான போது சிங்கள இனத்தைச் சேர்ந்த சுமார் 25 பேர் கொண்ட கூட்டமொன்று விபத்து நடந்த இடத்தில் பயணிகளுக்கு பெரும் உதவியளித்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துக்குள்ளான ரயிலில் சென்ற சிவயோகசுந்தரம் என்ற பயணி இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: நேற்று முன்தினம் மதவாச்சியருகே பரசங்கவேவ என்னுமிடத்தில் யாழ். கொழும்பு இன்ரசிற்றி விபத்துக்குள்ளானது விபத்து நடந்த இடம் ஆள் அரவமற்ற காட்டுப்பகுதியாகும்.

அக்கடுகதி ரயில் மிகவேகமாகச் சென்றதால் வளைவொன்றில் ஏற்பட்ட திருப்பமும் அதன் கடைசி இரு பெட்டிகளும் விபத்துக்குள்ளானதற்குக் காரணமாகும்.

'காட்பெட்டியும், குளிரூட்டப்பட்ட 'ஏயர்கண்டிஷன்' பெட்டியுமே தடம்புரண்டவையாகும்.

இவ்விபத்தையடுத்து ரயில் நிறுத்தப்பட்டது. அந்திசாயும் வேளை பயணிகளிடையே பெரும் பீதி குடிகொண்டது.

நாசவேலையாக இருக்கலாமோவென எண்ணியபோது அவ்விடத்தில் சுமார் 25 பேர் கொண்டகூட்டம் ஒன்று தென்பட்டது. இதனால் பயணிகளின் பீதி பன்மடங்கானது.

'பெருந்தாக்குதல்' ஒன்றுதான் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அக் கூட்டம் முற்றிலும் எதிர்பாராத விதமாக நடந்து கொண்டது.

தடம் புரண்ட பெட்டிகளுக்குள் ஏறி காயமடைந்த பயணிகளுக்கு உதவியது. கூடவே உடமைகளையும் உரியவர்களிடம் ஒப்படைத்தது.

சுமார் இருமணி நேரம் அவ்விடத்தில் ரயில் வண்டி தரித்து நின்றது. ஆனால் எதுவித அசம்பாவிதமோ அல்லது பயமுறுத்தலோ இடம் பெறவில்லை.

இதனைத் தொடர்ந்து ரயில் மீண்டும் புறப்பட ஆயத்தமானது. பயணிகள் தலா பத்து ரூபா வீதம் சேகரித்து தமக்குதவிய அக் கூட்டத்தவரிடம் ஒரு தொகைப்பணத்தை வழங்கினர். ஆனால் அவர்கள் அதனை ஏற்க மறுத்தனர். பின்னர் கட்டாயம் வாங்கும்படி நிர்பந்தித்ததையடுத்தே அவர்கள் அதனைப் பெற்றனர்.

தொடர்ந்து அநுராதபுரத்தை இன்ரசிற்றி அடைந்தது அங்கே காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிய பின்னர். கொழும்பு விரைந்தது இரவு 11-45 மணியளவில் கோட்டை ரயில் நிலையத்தை அந்த ரயில் வந்தடைந்தது.

விபத்தில் சிக்கிய பயணிகளுக்கு பலத்தகாயம் எதுவுமில்லை எதிர்பார்த்தது போல அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை அவ்விபத்து ஒரு நாசவேலையாக இருக்கவில்லை அதிவேகத்தினாலேயே அவ்விரு பெட்டிகளும் புரண்டன'' என்றார்.

இதேவேளை மதவாச்சிப் பகுதியில் இருதினங்களுக்கு முன்னர் காடையர் கூட்டமொன்று 'யாழ்தேவி' ரயிலைத் தாக்க பயங்கர ஆயுதங்களுடன் நின்றது குறிப்பிடத்தக்கது. இராணுவத்தலையீட்டினாலேயே அவர்களைப்பின்வாங்கச் செய்ய முடிந்ததையும் ஈழநாடு ஏற்கனவே தெரிவித்தது. (கி)

## ஜனாதிபதி நம்பிக்கை

[கொழும்பு]

''திம்பு பேச்சுக்களில் இன்னும் சிலதினங்களில் பயனுள்ள நல்ல பெறுபேறுகளை எதிர்பார்க்கலாம்'' என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அமைச்சரவையில் நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன அமைச்சரவையில் மேலும் தெரிவிக்கையில், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி, இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி ஆகியோர் நியாயமான முறையில் திம்புப் பேச்சுக்கள் முறிவுறாது தொடர்வதற்கு உதவியுள்ளார்கள். கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியப் பிரதமருடனும், திம்புவிலுள்ள இலங்கைக் கோஷ்டியின் தலைவர் கலாநிதி எச். டபிள்யூ. ஜெயவர்த்தன ஆகியோருடன் தொடர்புகொண்டேன். விரைவில் நல்ல பெறுபேறுகள் கிடைக்கும்'' என்று கூறினார்.

## இரத்தக்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இது குறித்து எவரையும் கலவரமடைய வேண்டாமெனவும், எத்தகைய வன்முறைகளையும் முறியடிக்கும் விதத்தில் பொலிஸ் பாதுகாப்புப் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். நீதவான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வயர்களைத் துண்டித்துவிட்டு அங்குள்ள ஊழியர்களை துப்பாக்கிமுனையில் பயமுறுத்தித் தடுத்து வைத்துக்கொண்டதாகவும் பின்னர் நீதிவான் நீதிமன்றக்களஞ்சிய அறையை உடைத்து அங்குள்ள பொருட்களைக் கொள்ளையடித்துச்சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் இரவு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா அவர்கள் ''மீனாட்சி திருக்கல்யாணம்'' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். (ச)

## வெலிக்கடை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரதமிருந்துவரும் (1) கணேசரத்தினம் அல்லது சுரேஷ் (2) கருணாகரன் அல்லது வடிவேல், (3) டொன்சிறில் அந்தோனி பூபாலபிள்ளை, (4) யோகேந்திரராஜா (5) மனோகரன் அல்லது பிரபு ஆகியோரில் கணேசரத்தினம், கருணாகரன், டொன்சிறில் ஆகிய மூவரும் மயக்கமடைந்த நிலையில் சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் யோகேந்திராவை நேற்று பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் மிகவும் பலவீனமாக இருப்பதாகத் தெரிவித்தனர். (மா)

## வவனியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் விபரங்களை உடனடியாக சமர்ப்பிக்கும்படி வவனியாபிரஜைகள் குழுத்தலைவர் திரு. சுவர்ணபாலா கேட்டுக்கொண்டிருக்கிறார். (மா)

## தீவிரவாதிகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டது.

பாதுகாப்பமைச்சு மேலும் தெரிவித்திருப்பதாவது:

''சமரச முயற்சிகளைக் குழப்புதற்கு சில தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் முயன்று வருகின்றன. இதனால் அவை தாக்குதல் சம்பவங்களை இத்தகைய குழப்ப முயற்சிகளுக்குப் பயன்படுத்த முயலுகின்றன. எனவே தீவிரவாதிகளின் மறைவிடங்களைத்தேடிச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். அவ்வாறு செல்லும் போது தேவையற்ற வன்முறைகள் இடம்பெறும் சூழ்நிலை காணப்படுகின்றது. ஆகையினால்; ஆயுதப்படைகளை தேடி வந்து தாக்கும் போது மட்டும் எதிர்த்தாக்குதல்கள் நடத்தி முறியடிக்க வேண்டும்'' என்று அப்பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## இனப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளன என்று ஈழம் தேசிய விடுதலை முன்னணி வட்டாரங்கள் நேற்று சென்னையில் தெரிவித்தன.

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி

திகதி: 6 (1985-8-22)

கிழமை: வியாழன்

திதி: ஸப்தமி பி. இ.வரை

நக்ஷத்திரம்: சுவாதி

காலை: 9-20ன் மேல் விசாகம்

மேடம்: எதிர்பார்த்த இன்பம் இன்று உங்களை அணைத்துக்கொள்ளும். ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் ஆதரவு கொடுப்பார்கள். பொன்னான தினம்.

இடபம்: எதிர்பாராத பணமுடை தென்படும். கடன் தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள் தொழில் துறையில் தொல்லைகள் தோன்றி மறையும்.

மிதுனம்: ஒளிமயமான காலம். இன்று ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணை நிற்பர்.

கடகம்; சொகுசான வாழ்க்கையை விரும்புவீர்கள். ஆடம்பரமான ஆடைகளில் மன நாட்டம் செல்லும். படித்தவர்களின் தொடர்பினால் பயனடைவீர்கள்.

சிங்கம்: புதுத்தொழில் முறைகளை மனம் நாடும். சகோதரவழியால் நன்மையும் வந்து சேரும். மக்களுக்கு மகிழ்ச்சிகரமான தினம்.

(7-ம் பக்கம் பார்க்க)

## ராணுவ—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விதங்கள் தொடர்பாக முரண்பாடான கருத்துக்கள் வெளிவந்துள்ளதாகவும் இதனை அடுத்து ராணுவ ரீதியில் விசாரணை ஒன்றை நடத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்றும் ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்றுத் தெரிவித்தார். (அ)

## திம்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாகத் திம்புவில் இடம்பெறும் பேச்சுக்களின் விபரங்களை பிரதமர் திரு. ராஜீவ்காந்தியிடம் வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி நேற்றுதெரிவித்தார்.

இனப்பிரச்னை குறித்து இலங்கை அரசும் தமிழ்ப் பிரதிநிதிகளும் கொண்டுள்ள அணுகுமுறை குறித்தும் இந்தியப்பிரதமரிடம் திரு. பண்டாரி விளக்கமாகக் கூறியுள்ளார்.

### 'அமிரின்' கருத்து

இதே நேரத்தில் புதுடில்லி வந்துள்ள திரு. அ. அமிர்தலிங்கம் ''இதுவரை திம்புவில் இடம்பெற்ற இரண்டு சுற்றுப் பேச்சுக்களிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை'' என்று டில்லியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

திரு. பண்டாரியுடன் செவ்வாய்க்கிழமை இரவு டில்லி வந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் திம்பு பேச்சுக்கள் குறித்து மேலும் தெரிவிக்கையில் ; ''இதுவரை திம்புவில் நடைபெற்ற பேச்சுக்கள் பூர்வாங்க அடிப்படையிலேயே இடம்பெற்றுள்ளன. உருப்படியாக எதுவும் இப்பேச்சுக்களில் நிகழவில்லை,' என்று கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் பிரதமர் ராஜீவ்காந்தியுடனும் வெளியுறவுத்துறை அதிகாரிகளுடனும் ஆலோசனைகளை நடத்தவே டில்லிக்கு வந்துள்ளார்.

''அதிகாரப் பரவல் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்த யோசனைகளை விவாதிக்க இலங்கை அரசு தயாராக இருப்பதாக திம்புவிலுள்ள இலங்கை அரசுப் பிரதிநிதிகள் தமிழ்ப் பிரதிநிதிகளிடம் முறைப்படியாக தகவல் எதுவும் தரவில்லை. இந்த விடயத்தை பத்திரிகைச் செய்தி மூலமாகவே அறிந்தேன்'' என்றும் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

### ஈழம் தேசிய விடுதலை முன்னணி

திம்பு இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்து விட்டதாகவும் தாங்கள் விதித்துள்ள நிபந்தனைகளை இலங்கை அரசு எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்கிறது என்பதைப் பொறுத்தே அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் அமையும் என்றும் ஈழம் தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நான்கு அமைப்புக்களைக் கொண்ட இந்த முன்னணியின் கூட்டம் ஒன்று நேற்று சென்னையில் நடந்தது. கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், திம்புவிலுள்ள தமது அமைப்புக்களின் பிரதிநிதிகளை உடனடியாகத் திரும்புமாறு பணித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியைச் சந்தித்து கடந்தவாரம் வவனியாவில் தமிழர் படுகொலை செய்யப்பட்டது குறித்து எடுத்துரைப்பது என்று இக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பேச்சு வார்த்தை பற்றி ‘புளொட்’ விளக்கம்

(யாழ்ப்பாணம்)

பேச்சுவார்த்தைகள் இந்திய அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டமையாலும், உலக நாடுகளின் கண்களுக்கு எம்மை நியாயப் படுத்துதலுமே இப்பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுகிறோம்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: தமிழ் மக்களின் கசப்பான அனுபவங்களை கருத்தில் கொள்ளும், நாம், ஸ்ரீலங்கா தலைவர்களுடன் பேசுவதன் மூலம் தமிழினப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்பட்டு விடும் என்று நம்பி இப்பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றவில்லை எனக் கூறவிரும்புகிறோம்

ஸ்ரீலங்கா அரசானது தமிழ் பேசும் மக்களின் அடிப்படை மனித உரிமைகளையும சுய மரியாதைகளையும் மதிக்கத் தயாரில்லை என்பதையும் மாற்று மக்கள் மத்தியிலும் இயக்கங்கள் மத்தியிலும் உள்ள முரண்பாடுகளை தனக்குச் சாதகமாக பயன்படுத்தி ஆயுத முனையில் அடிக்கடி ஒடுக்குவதிலேயே குறியாக உள்ளது என்பதை உலக அரங்கில் அம்பலப்படுத்தவும்.

நாம் இதுவரை நடத்தி வந்த போராட்டம் ஓர் உரிமைப் போராட்டம் என்பதையும் குறிப்பிட்ட இளைஞர்களின் தவறான நோக்கங்களால் முன் எடுக்கப்பட்ட போராட்டம் அல்ல என்பதையும் நாம் ஆளும் அரசுக்கு எதிரான பயங்கரவாதிகள் அல்ல என்பதை உணர்த்திடவும்.

இப்பேச்சுவார்த்தைகள் இந்திய அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டமையாலும் உலக நாடுகளின் கண்களுக்கு எம்மை நியாயப்படுத்தவுமே இப்பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுகின்றோம்.

இதுவரை வந்த பேச்சுவார்த்தைகளுக்கும் தற்போது பூட்டானில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளன.

இதுவரையிலும் இனவாத முதலாளித்துவ இலங்கை அரசு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மட்டும் நடத்தியது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் போராட்டத்திற்கு எந்த வகையிலும் மக்களை அணிதிரட்டாமலும் அமைப்பு ரீதியாக ஒன்றுபடுத்தாமலும் குறிப்பாக இனவாத அரசினது இராணுவத்தை சந்திக்க ஓர் அமைப்பை உருவாக்காத நிலையிலும் தமிழீழக் கோரிக்கைகளை பேச்சளவில் மக்கள் முன் வைத்துள்ளனர். இவர்களின் மறுபக்கத்தை நாம் பார்க்கும்போது குறைந்த பட்ச தீர்வுக்கான நடவடிக்கைகளிலேயே நாட்டம் காட்டி வந்துள்ளனர் என்பதை காணக்கூடியதாக உள்ளது.

ஆனால் இன்றைய பேச்சுவார்த்தைஅடிப்படையிலேயே மாறுபட்ட தன்மை கொண்டது ஒருதீர்க்கமானபோராட்டத்தை நடத்தக்கூடிய இராணுவத்தை தயாரித்த நிலையில்போராட்டத்திற்கான பன்னாட்டு ஒப்புதலைப் பெறுவதற்கும் உலக ஜனநாயக அணிகளிடம் எம் நிலையை உணரவைத்து எமக்கு ஆதரவாக அணிதிரட்டவும் இப்பேச்சுவார்த்தையை எமது போராட்டத்தில் ஒரு அங்கமாகவே கருதுகின்றோம் அரசின் எந்தவொரு நிர்ப்பந்தங்களையும் ஏற்றுக் கொள்ளாது எமது செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்ற வேளையிலேயே மாற்று இயக்கங்களின் தவறான திட்டமிடப்படாத நடவடிக்கைகளினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தவிர்க்கவும் உலக அரங்கில் எமது மனித உரிமைகளை அங்கீகரிக்க தயார் இல்லாத இனவாத அரசின் முகமூடிகளை கிழித்து எறியவும் நாம் நியாயமான தீர்வுக்கு தயார் ஆனவர்கள் என்பதையும் ஆனால் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டதாலேயே எமது மக்களை பாதுகாக்கின்ற நோக்கத்திற்காகவே நாம் ஆயுதம் ஏந்தினோம் என்பதை உலக அரங்கிற்கு நிரூபிக்கவே ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தைக்கு உடன்பட்டோம்.

இதுவரை தமிழீழப் போராளிகளை பயங்கரவாதிகள் என்றே அழைத்து வந்த ஸ்ரீலங்கா அரசானது இன்று மக்களின் விடுதலைக்காக போராடுகின்ற போராளிகள் என்பதையும் தமிழீழ மக்களின் பிரதிநிதிகள் என்பதையும் அங்கீகரித்துள்ளது

தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால்தான் பேச்சுவார்த்தை என்று கூறிவந்த ஸ்ரீலங்கா அரசு இன்று தமிழீழக்கோரிக்கை கைவிடப்படாத நிலையிலும் போராட்ட அமைப்புக்களுடன் பேச முன் வந்துள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆயுதமுனையில் முற்றாக அழித்துவிட முடியாது என்பதை ஸ்ரீலங்கா அரசு நன்கு உணர்ந்துள்ளது.

இன்றைய நிலையில் இப்பேச்சுவார்த்தையில் சிலஅடிப்படை நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டாலே இப்பேச்சுவார்த்தைகள் முயற்சி உருப்படியாகுமென நம்புகின்றோம்.

தமிழ் இனம் சுயநிர்ணய உரிமையுள்ள தேசிய இனமாக அங்கீகரிக்கப் படவேண்டும்.

தமிழ்பேசும்மக்களின் பாரம்பரிய பிரதேசம் பாதுகாக்கப் படவேண்டும்

இலங்கையில் பிறந்தவர்கள், மற்றும் இலங்கையைத் தாயகமாகக்கொண்டு அயல்நாடுகளில் வாழும் அனைவருக்கும் ஒரே மாதிரியான பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும்.

எமது நிர்வாகத்தை நாமே நடத்தும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

எமது மக்களைப் பொறுத்தவரையில் அவர்களே ரணங்களாகி இனவாத ஆட்சிக்கு முடிவு கட்ட முன் வந்துவிட்டார்கள். அவர்கள் வெடித்துக் கிளம்பாமல் இருக்க வேண்டுமாயின் அதற்கான முழுப் பொறுப்பையும் ஸ்ரீலங்கா அரசே ஏற்க வேண்டும இறுதியாக ஒன்று தமிழீழ மக்களிடையே குறிப்பாக உழைக்கும் மக்களுடைய விடுதலையே முழு நோக்கமாக் கொண்டு செயற்பட்டு வரும் நாம் அவர்களுக்கு ஒரு போதும் துரோகம் இழைக்க மாட்டோம் என்பதையும் தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுப்பதும் தான் எமது முதற்கடமை என்பதையும்பிரகடனப் படுத்துகின்றோம். (க)

---

# மட்டுநகர் சிறை உடைப்பு: கூண்டினுள் போட்டு என்னை படுக்கும்படி கைதிகள் கூறினர்!

## ஜெயிலர் அலோஷியஸ் சாட்சியம்

(கொழும்பு)

‘மட்டக்களப்பு சிறைச்சாலையில் 3 கைதிகள் எனது கைகளைக் கட்டி வாயில் பிளாஸ்டர் ஒட்டினார்கள். பின்னர் சிறைக்கூண்டு ஒன்றினுள் போட்டு என்னை நித்திரை கொள்ளும்படி கூறினார்கள்’ என்று மட்டக்களப்பு சிறைச்சாலை ஜெயிலர் ஜே. எம். அலோஷியஸ் கூறினார்.

கிளிநொச்சி வங்கிக் கொள்ளை தொடர்பான வழக்கு கொழும்பு மேல்நீதி மன்றில் நீதிபதி எச். டபிள்யு சேனநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது அவ்வழக்கு சம்பந்தமான சந்தேக நபர்கள் மட்டக்களப்பு சிறை உடைப்பில் தப்பி ஓடியது குறித்து சாட்சியமளித்த போதே ஜெயிலர் அலோஷியஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். அரச சட்டத்தரணி மொஹான் பீரிஸ் சாட்சியத்தை நெறிப்படுத்தினார்.

ஜெயிலர் அலோஷியஸ் தொடர்ந்து சாட்சியமளித்ததாவது: ‘‘கிளிநொச்சி வங்கிக் கொள்ளை தொடர்பான சந்தேக நபர்கள் 23 9-83 அன்று மட்டக்களப்பு சிறை உடைப்பில் தப்பிச் சென்றனர்

அச்சிறை உடைப்பு இடம் பெற்ற போது நான் மட்டக்களப்பு சிறைச்சாலையின் வாயில் காவலாளியாக இருந்தேன். 23-9-83 அன்று மாலை 5-30 முதல் மறுநாள் காலை 8 மணிவரை எனது கடமை நேரமாகும். பயங்கரவாத தடுப்புச்சட்ட சந்தேக நபர்கள் இச்சிறையிலிருந்தனர்.

சம்பவதினம் இரவு 7-35-க்கும் 7-45-க்குமிடையே 3 சிறைக்கைதிகள் என்னிடம் வந்து சிறைச்சாலை திறப்பைக் கேட்டனர். நான் கொடுக்க மறுத்தேன் அவர்கள் என்னைத் தாக்கி பலவந்தமாக திறப்பை எடுத்தனர்.

கைகளைக் கட்டி, வாயில் பிளாஸ்டரை ஒட்டி சிறைக் கூண்டு ஒன்றினுள் என்னைப் போட்டு அங்கு என்னை படுக்கும்படி கூறினார்கள், 15 நிமிடங்கள் வரை அடைபட்டுக் கிடந்தேன். தப்பிச் சென்றவர்களை தொடர்ந்து தேடினோம். அவர்கள் இதுவரை கண்டு பிடிக்கவில்லை. இதனால் அவர்களை இதுவரை நீதிமன்றில் ஆஜராக்க முடியவில்லை’ என்றார்.

இதனைத் தொடர்ந்து நீதிபதி இவ்வழக்கை செப்டெம்பர் 3-ம் திகதிவரை ஒத்தி வைத்தார். (கி)

---

# பொன் விழாவையொட்டி சன்மார்க்கசபை நடத்தும் நீதிநூல் மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை தனது பொன்விழாவையொட்டி நீதிநூல் மனனப் போட்டியொன்றை நடத்தவிருக்கிறது.

இப்போட்டியில் மாணவ, மாணவிகளும் சிறுவர், சிறுமிகளும் பங்கு கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, மூதுரை, நல்வழி, நன்னெறி, திருக்குறளில் சில பகுதிகள் முதலியவற்றை மனனம் செய்து ஒப்புவிப்பதற்கான போட்டிகளில் வெற்றி பெறுவோருக்குச் சன்மானமும் வழங்கப்படவிருக்கின்றன.

இப்போட்டியானது மனனப் போட்டி, எழுத்துப் போட்டியென இரு பிரிவாக நடைபெறுமென்றும் பங்குபற்ற விரும்புவோர் 18-9-85க்கு முன் விண்ணப்பிக்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்குரிய மேலதிக விபரங்களை தெல்லிப்பழை, குரும்பசிட்டி சன்மார்க்க சபை பொதுக்காரியதரிசியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

## வெள்ளி விழா மலர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைவாழ் சைவப் புலவர்களின் வரலாற்றுக் குறிப்புகள், சைவப் புலவர் சங்கத்தின் வரலாறு, சைவப் பேரறிஞர்களின் ஆக்கங்கள் என்பன இடம்பெறும் வகையில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கங்கள் வெள்ளி விழா மலர் வெளிவரவேண்டும் என இம் மாதம் 17ம் திகதி நடைபெற்ற இச்சங்க வெள்ளி விழாக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

சைவப்புலவர் திரு. சி. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சைவப் புலவர் திரு. நா. தங்கரத்தினம் [அதிபர்] வெள்ளி விழா மலர் ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டார். (வ)

---

## கலைப்பீட பரீட்சை நடக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட முதலாம் வருட பரீட்சைகள் இம்மாதம் 19-ம் திகதி தொடக்கம் சுமூகமான சூழ்நிலையில் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இராமநாதன் நுண்கலைப் பீட 3-ம் வருட பரீட்சையும் நடைபெற்றுவருகிறது.

★

## நுண்கலைப்பீட பரீட்சைத்திகதிகள்

இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் போடப்பட்ட முதலாம் வருட பரீட்சைகள் செப்டம்பர் மாதம் 2-ம் திகதியும் இரண்டாம் வருடப் பரீட்சைகள் 3-ம் திகதியும் ஆரம்பமாகுமென பல்கலைக்கழக பரீட்சை தொடர்பான நிர்வாகம் தெரிவித்துள்ளது. [ச]

---


“ஸ்டொப்” கிளட்ச் & பிறேக் புளுயிட்
மலிவான விலைக்கு
போதியளவு
பெற்றுக்கொள்ளலாம்
STOP
Hydraulic BRAKE & CLUTCH FLUID
விநியோகஸ்தர்கள்:-
டீமோ இன்டஸ்றீஸ்
லிமிடெட்
65, ஜேத்தவன வீதி,
கொழும்பு - 14.
தொலைபேசி: 23702 4, 34751


CHEMANEX
தயாரிப்பு:
கெமனெக்ஸ் லிமிட்டெட்
450 மிலி - ரூ. 28/25
250 மிலி - ரூ. 16/45



கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ



வெளிநாட்டுப் பிரயாணங்கள்
பிரான்ஸிற்கு விசாவுடன் செல்ல விரும்புகிறீர்களா?
மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்பெண்கள்,
தொழிலாளர், மெக்கானிக், மேசன்,
மரவேலையாளர் போன்ற தொழில் பெற்றுச்
செல்ல விரும்புகின்றீர்களா?
பிரயாண வசதிகள் உடன் செய்துகொடுக்கப்படும்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
ஷாஹி ஷீபாஸ் ஏஜென்ஸீஸ்
125, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
130



ரெருசோ ஷிப்ஸ்
TERRAZZO CHIPS
IMPORTED
★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
★ வெள்ளைச் சீமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம் Rs. 6/75-க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 — 31511

# ‘வடக்கு - கிழக்கு தபால் அலுவலக இழப்புக்கு நாம் பொறுப்பல்ல’

## ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

“வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தபால், உப தபால் அலுவலகங்களில் பயங்கரவாதச் செயல்களின்போது ஏற்படும் அரசாங்க சொத்துகளின் இழப்புகளுக்கு அந்தந்த தபால், உப தபால் நிலைய அதிபர்களே பொறுப்பாகும்” என்ற அரசாங்கத்தின் சட்ட திட்டத்தை மீளாய்வு செய்யுமாறு கோரி அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. கே. எஸ். கருணாரத்ன ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவிற்கும். தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்கும் மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதிகளுன் தாக்குதல் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படும் அரசாங்கப்பணம், சொத்துக்களின் இழப்பு ஆகியவற்றை அஞ்சலதிபர்களும், உப-அஞ்சலதிபர்களும் ஈடு செய்தல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறோம். அவர்களிடமிருந்து இத்தொகைகள் உடனடியாகவோ அல்லது சம்பளத்திலிருந்து தவணை முறையிலோ அறவிட அறிவிக்கப்படவேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்கள் எடுத்த ஒரு முடிவுக்கு ஏற்பவே இவ்வாறு அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளதாக நாம் நம்புகிறோம்.

அந்த முடிவானது:

“இழந்த அரசாங்கச் சொத்துக்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதோடு அவர்களைக் கடமையிலிருந்து இடைநிறுத்துமாறும் அறிவுறுத்தல்களை வழங்குக” என்பதாகும்.

அஞ்சலதிபர்களும், உப அஞ்சலதிபர்களும் தம் பாதுகாப்பில் இருக்கும் அரசாங்க பணம். சொத்துக்கள் என்பவற்றிற்கு அவர்களே பொறுப்பு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனினும் பயங்கரவாதம் நடைபெறும்போது இவ்வாறான ஒரு பாறுப்பை அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது நியாயமான செயலன்று.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தற்போதைய சூழ்நிலையில். பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்யவே அடிபது அஞ்சல் திணைக்களத்தின் பொறுப்பாகும். எனினும் அவ்வாறு எதுவும் செய்யப்படவில்லை உத்தியோகத்தருக்கு ஆயுதங்களோ அல்லது அவற்றைக் கையாளும் பயிற்சியோ வழங்கப்படவில்லை எனவே ஆயுதமேந்திய பயங்கரவாதிகளுடமிருந்து அரசாங்கச் சொத்துக்களைப்பாதுகாக்கும் செயலை அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

பயங்கரவாதிகளுடன் ஒத்துழைத்து. அவர்களுடன் சேர்ந்து அரசாங்கப் பணம், சொத்துக்களை திருடும் உத்தியோகத்தர்களுக்காவே மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே கொள்ளையில் பங்கு வகித்தமை நுண்ணாய்வு மூலம் ஐயந்திரிபுற நிரூபிக்கப்படும் பட்சத்தில், அவ்வாறான உத்தியோகத்தரிடமிருந்து இழப்பை அறவிடுவதை நாம் எதிர்க்கவில்லை. இதனைவிடுத்து அவ்வறிவுறுத்தல் வேறு விதமாகக் கருதப்பட்டு, கொள்ளையுடன் தொடர்பிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரே இழப்பைஈடுசெய்யவேண்டுமென்றிருப்பது; பலவித இன்னல்களுக்கு மத்தியில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களுக்கு அநீதியாகும்.

ஐயா, தாங்கள் இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தலை மீளாராய்ந்து. அப்பாவி உத்தியோகத்தர்களைக் கொண்டு இழப்புகள் ஈடு செய்வதைத் தடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

---

### இன்றைய பலன்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

கன்னி: சீறிவரும் கோபம் உங்களை நிலைதடுமாற வைக்கும். தானிய நஷ்டத்திற்கும் இடமுண்டு. அமைதிவேண்டும்.

துலாம்: சிறுவிடயத்திற்குக் கூட அதிக ஆத்திரப்படுவீர்கள். வீணை சந்தேகங்களும் தோன்றலாம். எதையும் சிந்தித்துச் செய்யவும்.

விருச்சிகம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம். தெய்வத்தின் அருள் தாராளமாய்க் கிடைக்கும். அரசியல் வாதிகளுக்கு நன்மையான தினம்.

தனுசு: பொறுமையின்நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத்தேடிக்கொள்வீர்கள். அரச பயத்திற்கு இடமுண்டு.

மகரம்: ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக்கிடைக்கும். ஈய்வழியால் நற்செய்திக்கும் இடமுண்டு.

கும்பம்: புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும் புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும்.

மீனம்: பகை மூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். சிறிய விடயத்திற்குக்கூட குறைகேட்க நேரிடும். துயர்படிந்த தினம்.

திருமலை
– வே. ரவீந்திரன் –

---

### பின்முற்றுக்கும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனம் முடியாமல் காலம் சென்ற குமாரசாமி நாகலிங்கத்தின் சொத்துக்களின் விடயமாக:-

குமாரசாமி நாகலிங்கம் நாகலிங்கமுதலியார் வீதி, பருத்தித்துறை.
— காலஞ்சென்றவர்

குமாரசாமி பரமு, நாகலிங்க முதலியார் வீதி, பருத்தித்துறை.
— மனுதார்,

சொத்துறுதிசார்
நியாயதிக்கம் இல: 1224/TY

எதிராக

1. விஜயகமூர்த்தி ரங்கநாதன் கைம்பெண் தெய்வானைப்பிள்ளை, பூதராயர் ஒழுங்கை,பருத்தித்துறை.
2. மயில்வாகனம் கந்தப்பு கைம்பெண் காமாட்சியம்மாள் நாகலிங்கமுதலியார் ஒழுங்கை, பருத்தித்துறை.
3. சின்னத்தம்பி வியாகமுத்துவும்,
4. பெண் செல்லமுத்து பத்திரகாளி கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை.
5. கிருஷ்ணபிள்ளை நாகலிங்கம் பூதராயர் ஒழுங்கை பருத்தித்துறை,
6. விஜயகமூர்த்தி ஏரம்பமூர்த்தியும்,
7. பெண் சாவித்திரியும் அரசடி ஒழுங்கை, பருத்தித்துறை.
8. மாணிக்கம் விஜயத்தம்பி
9. பெண் ருக்குமணியும் நாகலிங்கமுதலியார் ஒழுங்கை பருத்தித்துறை.
10. நடராசா நமசிவாயம் நாகலிங்க முதலியார் ஒழுங்கை பருத்தித்துறை
11. நடராசாகிருஷ்ணராசா.
12. நடராசா ஆனந்தராசா.
13. நடராசா விஜயராசா.
14. நடராசா ஜெயராசா.
15. நடராசா பத்மராசா
16. வேல்முருகு சாந்திக்குமாருவும்,
17. பெண் விஜயலட்சுமி
18. பாலகிருஷ்ணன் வரேந்திரராசாவும்,
19. பெண் சாந்தலஷ்மி
20. சதானந்தம் யாதவானந்தனும்
21. பெண் வரலஷ்மி எல்லோரும் விஜயகமுதலியார் வீதி, பருத்தித்துறை.

— எதிர்மனுதாரர்கள்

மேலே சொல்லப்பட்ட காலம் சென்றவரின் மரணசாதனமற்ற சொத்துக்கள் நிர்வகித்தல் சம்பந்தமாக மேலே குறிக்கப்பட்ட இலக்க சொத்துறுதி சார்பு] வழக்கு இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டு பின் முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது,

எனவே எவரேனும் இதில் அக்கறை உள்ளவர்கள் இந்த நீதிமன்றத்தில் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4ந் திகதி முற்பகல் 9 மணியளவில் மன்றில் சமூகம் கொடுத்து பின்முற்றுகும் கட்டளை ஏன் முற்றுன கட்டளை ஆக்கக்கூடாது என்பதற்கு ஏதேனும் காரணம் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்கள்.

1985ம் ஆண்டு ஆடி மாதம் 29ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

ச. நடராசா
பதிவாளர்.

தயாரிப்பு:
க. சி. முத்துக்குமாரசாமி
மனுதாரின் சட்டத்தரணி
178

---


மாலகன் V.V:
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
CANNIBAL
HOLOCAUST
Adutls only

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30, 6-00
முத்துராமன் - ஜெயலலிதா
தங்கவேலு
கணவன் மனைவி

“லதா” மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
விஜயகாந், அனுராதா
மதுரை சூரன்

மே(f)பெயர் மினி சினிமா
(கன்னாதிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4-45, 7-00
“Basket Case”
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அரை உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை.

ஸ்ரான்லி மினி
5”X5” திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
LAST ORGY
ஹிற்லர் ஆட்சியில் தீவிரவாத பெண்களுக்கு செய்த கொடுமைகளும் அவர்கள் படும் துன்பங்களையும் சித்தரிக்கும் படம்.
Adults only

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
CODE NAME
WILD GEESE
மிக நவீன ஆயுதங்களுடன் 6 கொமாண்டோக்கள் கொண்ட கொரில்லா கோஷ்டி இராணுவ முகாம் மீது தாக்குதல்

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
சிவாஜி. பானுமதி நடித்த
கள்வனின் காதலி
22, 23 திகதிகளில்
கமல், அம்பிகா நடித்த
உயர்ந்த உள்ளம்

வெலிங்டன்
10-30, 2-15, 4-30,
6-45,
திகதி: 14 - 15
THEATRE OF DEATH
16 முதல்
DRAGON DIES HARD
(புரூஸ்லியின் படம்)
முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் காட்டப்படுகிறது.

வீடியோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
திவாகராஜன், சிவச்சந்திரன்,
பூர்ணிமா ஜெயராம்,
லக்ஷ்மிதா, ஜெய்சங்கர்
நடித்த
சாரு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
சலட்மன் கலர்

நியூ சினிமாலயா
[R. G பில்டிங் மேல்மாடி]
10-30. 12-30, 2-30,
4 30 6 30
INTRUSION CAMBODIA
பல ஆயிரக்கணக்கான இளைஞரின் வேண்டுகோளுக்கிணங்க புத்தம் புதியபிரதியாக வெளியிடப் பட்டுள்ளது.

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்
இப்படத்திற்கு இளைஞர் மொய்ப்பதன் காரணம் என்ன?
10-30, 12-30, 2-30, 4-45
INTRUSION
CAMBODIA
இரவு 6-45க்கு மட்டும்
சிலுக்கின்
பொலிஸ்... பொலிஸ்...

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
Pending
Grievences
(JUNGLE WOMEN)
—இன்று மட்டும்—

குமரன்
மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
Gods Gun
(War Film)
பயங்கர சண்டைகள், குதிரை ஓட்டங்கள் நிறைந்த படம்

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, மட்டும்
Private-Lessons
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
4-30p m and 7-15P.m only
“Kill Them all and Come Back alone”


---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

[22-8-1985 வியாழக்கிழமை]

### அமரர் திரு. தம்பு சபாரத்தினம்

(பிரண்டி கடை உரிமையாளர், வவுனியா.)

அன்னையின் மடியில்:
25–9–1909

ஆண்டவன் அடியில்:
23–7–1985



எங்கள் குடும்பத் தலைவராய், தெய்வமாய் ஒளி வீசி எம்மையெல்லாம் வழிநடத்தி திடீரென மறைந்தாலும் உங்கள் அன்பும், பண்பும், பாசமும் எங்கள் கண்முன் நிழலாடிக்கொண்டேயிருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் அன்புமறவாத
குடும்பத்தினர்.

பணிக்கர் வளவு,
திருநெல்வேலி

(150)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY



வவனியாவில் ஏற்பட்ட வன்செயலில் பாதிப்புற்று, அங்கிருந்து அகதிகளாக வெளியேறி கிளிநொச்சியில் தஞ்சம் அடைந்த ஏராளமான குழந்தைகளில் ஒருபகுதியினரை இங்கு காணலாம். (மற்றுமொரு படம் ஐந்தாம் பக்கம்)

பதட்டப் பகுதிகளில்——

# பணியாற்ற அரச டாக்டர்கள் மறுப்பு!

(கொழும்பு)

அரசாங்க டாக்டர்கள் சிலர் அனுராதபுரம், திருகோணமலை, பதவியா, பொலநறுவை ஆகிய இடங்களில் சேவையாற்ற மறுப்புத் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதிய பாதுகாப்பில்லை எனக் காரணங் காட்டியே அவர்கள் மேற்குறிப்பிட்ட இடங்களில் பணியாற்ற மறுத்துள்ளனர்

இது குறித்துச் சுகாதார அமைச்சுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இவ்விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இடங்களில் பணியாற்ற மறுத்துள்ள டாக்டர்களுடன் அவர்களது முடிவை மாற்றுவகையில் பேச்சுக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அனுராதபுரத்தில் மட்டுப் சுமார் பதினொரு டாக்டர்கள் சேவையாற்ற மறுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## மரண அறிவித்தல்

### வண. பிதா போல் பஸ்ரியான்

வண. பிதா போல் பஸ்ரியான் காலமானார். அன்னாரின் நல்லடக்க சடங்குகள் இன்று வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ். மரி அன்னை பேராலயத்தில் நடைபெறும். 185

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி விஜயரத்தினம்

உடுவிலைச் சேர்ந்த திருமதி இராசமணி விஜயரத்தினம் காலமானார். இவர் காலஞ்சென்ற அருள்திரு S P விஜயரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. A R S முத்தையாவின் அன்புச் சகோதரியும், திருமதி மங்கையர்க்கரசி முத்தையாவின் மைத்துனியும், வதனி, ஜெபநாயகம் ஆகியோரின் மாமியாரும், டிலக்ஷி, டெரிக் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார். அன்னாரின் இறுதி ஆராதனை உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில், இன்று வியாழன் 22-8-85, காலை 9-00 மணிக்கு நடைபெறும். அதன்பின் நல்லடக்க ஆராதனை மானிப்பாய்ச் சபை சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்

தகவல்: வதனி, ஜெபநாயகம்.

''பெத்தேல்''
மானிப்பாய் றோட், உடுவில். 171

## மரண அறிவித்தல்

### கனகசபை சோமசுந்தரம்

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

சரவணையூர் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் கனகசபை சோமசுந்தரம் அவர்கள் காலமகிவிட்டார். அன்னார். இராசம்மாவின் அன்புக்கணவரும், திருமதி சௌந்தரநாயகி சரவணபவானந்தன் (ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), பொன்னம்பலம்பிள்ளை (வரிமதிப்பாளர் இறைவரி திணைக்களம், கொழும்பு), முருகவேள் (லண்டன், மாணிக்கவாசகர் (ஜேர்மனி), பேரின்பநாதன் (ஆசிரியர் சைவப்பிரகாச வித்தியாசாலை, வேலணை), திருமதி சிவகாமசுந்தரி சத்தியானந்தன் (கனடா), கந்தவேள் லண்டன்), திருஞானசம்பந்தன் (லண்டன்), கௌரிநாயகி (டாக்டர் அரசினர் வைத்தியசாலை, கொழும்பு), ஆகியோரின் அன்புத் தந்தையும் சரவணபவானந்தன் (நைஜிரியா), கௌசலா, நிர்மலா, பூரணம் வேதநாயகி (வவனியா மகளிர் வித்தியாலயம், சத்தியானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனுருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இல்லத்தில் நாளை (22-8-1985) வியாழன் பி ப. 4 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

[186] தகவல்:- சி. சரவணபவானந்தன்

# "இலங்கையை வெல்லவே வந்துள்ளோம்" - கபில்தேவ்

(கொழும்பு)

''இலங்கையை வெல்லவே வந்துள்ளோம்'' என்று இந்திய கிரிக்கெட் அணி காப்டன் கபில்தேவ் தெரிவித்தார்:

இந்திய அணி நேற்று முன்தினம் மாலை இலங்கை வந்து சேர்ந்தது கட்டுநாயக்கா சர்வதேசவிமான நிலைய துமலர் மாலைகள் அணிவித்து இவர்கள் வரவேற்கப்பட்டனர்,

கொழும்பு 'தாஜ் சமுத்ரா' ஹோட்டலில் இந்திய அணி தங்கியுள்ளது. அங்கும் இவர்களுக்கு செங்கம்பளவரவேற்பளிக்கப்பட்டது இதனையடுத்து அங்கு பத்திரிகையாளர் மாநாடொன்றை இந்திய அணி நடத்தியது அப்போதே கபில்தேவ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது: நாம் இலங்கை கிரிக்கெட் அணியை வெல்லுவது என்ற முடிவுடனேயே இங்கு வந்துள்ளோம்.

இலங்கை அணியிடமிருந்து ஒரு சிறந்த போட்டியை நாம் எதிர்பார்க்கின்றோம் என்றார்.

இலங்கை இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான முதலாவது சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9-50 மணிக்கு ஆரம்பமாகின்றது. இப்போட்டி தொலைக்காட்சியில் நேரடியாக ஒளி பரப்பப்படும்.

இவ்விரு அணிகளும் மூன்று டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றவுள்ளன. இந்த டெஸ்ட் தொடரில் வெற்றிபெறும் அணிக்கு ஜனாதிபதி வெற்றிக்கிண்ணமும், ரொக்கப்பணமும் ஜனாதிபதி ஜயவர்த்தனவால் வழங்கப்படும் இந்திய அணி ஒரு மாதகாலம் இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது. (கி)

மூன்றுநாள் கிரிக்கெட்:

## இலங்கை 3—195

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் 'கோல்ட்' கோஷ்டிக்கும், இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நேற்று ஆரம்பமான மூன்றுநாள் கிரிக்கெட் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை தலைவர் கோஷ்டி நேற்றைய ஆட்ட முடிவில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 195 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை வீரர்களான, சுமித்திரவர்ணகுலசூரியா ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும், காப்டன் அர்சுனரணதுங்கா 51 ஓட்டங்களையும், அமரசிறிவர்த்தன 46 ஓட்டங்களையும் பெற்றனர். [வி]

# கடமையைச் செய்யும் மின் ஊழியரைப் பயமுறுத்த வேண்டாம்

## ஆணையாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''மின்சாரக் கட்டணம் ஒழுங்காகக் கட்டாதவர்களின் மின்சாரத் தொடர்பு துண்டிக்கப்படும்போது. சபைஊழியர்களைத் தாக்க முயன்றாலோ பயமுறுத்தினாலோ துண்டிக்கப்பட்ட மின்சாரத்தொடர்பு மீண்டும் இணைக்கப்படமாட்டாது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். மின்கம்பம் மூலம் மின்சாரம் துண்டிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட வீட்டுக்காரரைத் தவிர, அவ்வீட்டைச் சுற்றியுள்ள பொதுமக்களும் பாதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும்.''

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு சி வீ. கே சிவஞானம் பொதுமக்களுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்

கடந்த சனிக்கிழமை மின்சாரப்பகுதி ஊழியர்கள் குருநகர்ப்பகுதியிலுள்ள வீடொன்றிற்கு. மின்சார நிலுவையைச் செலுத்தாத காரணத்தினால் மின்துண்டிப்பை மேற்கொள்ளச் சென்ற சமயம் வீட்டுக்காரர் தான்தோன்றித்தனமாகத் தாக்கியபோது அவ்வூழியரைக் காப்பாற்றப் பொதுமக்கள் எவரும் முன்வரவில்லை என்பது குறித்தும் ஆணையாளர் கவலை தெரிவித்துள்ளார்.

## ரூ. 5 லட்சம் கடத்தல் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான துணிக் கடத்தல் சம்பவம் முறிடிக்கப்பட்டுள்ளது.

பெறுமதியான சேலைகள். சாரங்களைக் கொண்ட 45 பொதிகளுடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்தி வரப்பட்ட இயந்திர வள்ளத்தை நெடுந்தீவுக் கடலில் வைத்து கடற்படையினர் கைப்பற்றி யாழ். சுங்க இலாகாவில் நேற்று ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

யாழ் உதவி சுங்க கலெக்டர் திரு. செ. கணேஷ் இக் கடத்தல் சம்பவம் குறித்து பூர்வாங்க விசாரணை ஒன்றை இன்று ஆரம்பிக்கவிருப்பதாகவும் இவ்வார இறுதிக்குள் விசாரணை முடிவு தெரிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# லோங்கோவாலுக்கு பூரண அரச மரியாதை



(புதுடில்லி)

நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட அகாலிதள் கட்சித் தலைவர் சன் ஹர்சன் சிங் லோங்கோவாலின் பூதவுடல் நேற்றுப் பிற்பகல் பூரண அரச மரியாதையுடன் அவரின் சொந்தக் கிராமமான லோங்கோவாலில் தீயுடன் சங்கமமானது.

பொற்கோவில் தலைமைக் குரு ஜானி ஸாகிப்சிங் சமயப் பிரார்த்தனைகளை நடத்திய பின்னர் அகாலிதள் கட்சித்தலைவர்களில் ஒருவரான திரு. ஜாகிதர் கிர்பால்சிங் சிதைக்குத் தீ வைத்தார். லோங்கோவாலின் பூதவுடல் சிதையில் வைக்கப்பட்டபோது அவரின் இளைய சகோதரி பீ.பீ. சங்கோ உட்பட அங்கிருந்த பெண்கள் துக்கம் மேலிட வாய்விட்டு அழுதனர்.

ராஷ்டிரபதியின் சார்பில் ராஷ்டிரபதியின் இராணுவச் செயலர் ஏர்மார்ஷல் ஆர். எஸ் நாயுடுவும் பிரதமர் சார்பில் திரு. பி. வி. நரசிமராவும், திரு அருண்நேருவும் மற்றும் பல அரசியல், சமூக, மத அமைப்புக்களின் பிரமுகர்களும் பூதவுடலுக்கு மலர் வளையங்களை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். பஞ்சாப் ஆளுநர் திரு அர்ச்சுன் சிங், லோக்சபாவின் சபாநாயகர் திரு பல்ராம் ஜாக்கர். மற்றும் அகாலிகட்சியின் மூத்த தலைவர்கள் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டனர்

பிரதமர் திரு. ராஜீவ் காந்தி லோக்சபாவில் நேற்று இரங்கலுரை நிகழ்த்தினார். (ஏ)

## கடத்தப்பட்ட இருவரும் விடுதலை

[யாழ்ப்பாணம்]

நேற்றுமுன் தினம் இனம்தெரியாத நபர்களால் கோண்டாவில்வட பிராந்தியபோக்குவரத்துச்சபை டிப்போவில் வைத்து கடத்தப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஊழியர்களான எம். டனிஷியஸ், கே விஜமகாலிங்கம் ஆகிய இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச]

இலங்கையில் "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 ,24126